**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 143 JAFFNA, FRIDAY, 1st JULY, 1983 No. 26

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

...VERSITY OF JAFFNA, SRI LANKA RECEIVED 7-7-198... PERIODICALS DIVISION LIBRARY

***Subscription***

Inland: Rs. 35/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

## Uduvil Girls' College

*Miss Helen D. Meisner*, wound up her term as a UCBWM missionary at Uduvil Girls' College on 26-6-1983 after serving the school for four years and six months. Before coming to Sri Lanka she had seen service in Korea as a teacher at Seoul Foreign School. She leaves the island today (1-7-83) for her home in California.

The Valedictory for Miss Meisner at Uduvil Girls' College commenced with a Service at the School chapel conducted by Rev. S. N. Sugunananthan and ended with a Fellowship Tea at the Mission House. Mrs. S. J. Somasundaram, former Principal of Uduvil Girls' College conveyed to her the gratitude of the school for her quiet, unostentations service to the school during her stay at Uduvil.

The Kindergarten Department for which she set up an *Activity Room* and trained a few teachers had a seperate function for her to say good bye and 'thank you'.

Speaking to the *Morning Star* correspondent before she left, she said that her wish and prayer for Uduvil was that the special departments which cater specially to the needs of the girls — as Home Science, Commerce and Music — would continue to grow and serve the total educational needs of all her pupils — even those who may not proceed for Higher Education.

## A True Friend of India Leaves

The Rev. Eric A Gass has been appointed Regional Secretary of the United Church Board for World Ministries and Southern Asia, Secretary of the same Board and the Disciples Board of Missions, New York. He takes over this office from Dr. Telfer S. Mook who served in this capacity for 25 years.

Rev. Gass served in India (in the CNI) for 24 years. His parents and grand parents were missionries in India and the Gass Memorial Centre at Rajpur is a tribute to their devotion in India.

Rev. Gass said "India is our home country, our roots go deep here, I feel that I am going from India on a foreign service to New York."

*NCC Review* June-July, 1983

## Witnessing in India Today

A new book has been published by the United Evangelical Lutheran Churches in India under the title: "Witnessing in India Today". The author is the General Secretary of the Synod of the C. S. I. the Rev. M. Azariah. The book consists of five Sections under the main heading: (1) Evangelistic witness, (2) Social witness, (3) Political witness, (4) Global witness, and (5) Jesus Christ - the life of India. Under these chapter headings the author has brought together some of his lively lectures and articles on the theme of Christian witness in India today. There is much light and inspiration in the book and we would warmly commend it to our readers.

## United Theological College, Bangalore



Rev. (Dr.) E. C. John

The Rev. Dr. E. C John was installed as the new Principal of United Theological College, Bangalore at a solemn Service which took place on 18-6-83 at the Charles Ranson Hall of the United Theological College, Bangalore. Dr. Klaus Englhardt, Bishop of the Church of Baden, W. Germany delivered the message at the Service. Dr. John assumes this responsible office with great deal of experience and long connection with the U. T. C., Bangalore. After completing his B. Sc. degree at the Travancore University, Dr. John taught for a couple of years and was also the Diocesan Youth Worker in the Madhya Kerala Diocese for a year. He was a student at U. T. C. from 1951 — 54 and passed his B. D. very creditably winning several academic Prizes from the College and from the Senate. On completing his theological studies he worked for 3 years in the Madhya Kerala Diocese and later joined the Cambridge University from 1957 — 59 where he obtained the M. A. degree. In 1959 he joined the staff of the U. T. C., Bangalore. As a staff member he was granted study leave from 1965 — 68 during which period he followed his doctoral studies at the University of Heidelberg. He obtained his doctorate in Theology in the field of the Old Testament. The subject of his dissertation was "Life and Death in the Prophecy of Judgement". In 1968 he returned to U. T. C. and was made Prof. of Old Testament in which capacity he continued till 1979. During this period he went on a year's Sabbatical as Visiting Professor at the Andover Newton Theological School in Massachussets, U S. A. and at the Lutheran Theological Seminar in Philadelphia. From 1979 — 82 he served as Study Secretary of the Association of Churches and Missions in South West Germany.

Apart from his academic career Dr. John has been actively engaged in the life of the Church both in Bangalore and at the Synod level of the Church of South India for many years. He was Convener of the Liturgy Committee of the C. S. I. and was responsible for a great deal of the creative activity in the liturgical field. He was one of the founder members of the Society for Biblical Studies in India found in 1963. He continues to be one of its leading lights. Dr. John has published many works both in English and Malayalam. He was the Chief Editor of the one volume Bible commentary in Malayalam published in 1979. Dr. John married Juliana Hannah Eherenberg a daughter of Prof. Hans Eherenberg and Mrs. Eherenberg of Germany. The Johns have two daughters and two sons.

With his academic qualification, rich experience and long connection with the United Theological College, friends and well wishes of the College expect even a greater future for U. T. C. under his leadership.

*Obituary*

**Mr. P. Thevarajah**

Mr. P. Thevarajah, Proprietor and Engineer of Waragans Ltd., passed away on Friday the 24th June. Mr. Thevarajah was a leading construction engineer and had undertaken some of the important buildings in Jaffna like the New Market in Jaffna, some of the buildings of the Jaffna University and some buildings of the Jaffna College Technical Institute. The funeral took place in his home on Saturday the 25th morning. His body was taken for a short while to lie in state at the Alumni building of St. Patrick's College, Jaffna. At a brief Service held there Dr. P. J. C. Philips, Rev. Fr. Jesunesan, Rev. Joseph Sarvanandhan and Mr. A. Kadirgamar paid tributes to the role played by the deceased in the life of the community in Jaffna. The remains were buried at the Tellipallai Church burial grounds. Rev. D. R. Ambalavanar performed the commital rites assisted by Rev. S. N. Sugunananthan. Mr. Thevarajah is an old boy of St. Patrick's, Jaffna and of Jaffna College, Vaddukoddai.

## Chundikuli Girls' College

Cordially Invites

Old Girls, Parents and Friends

to

**The Service of Installation**

of

**Mrs. L. P. Jayaveerasingam**

B. Sc., Dip-in-Ed.

As Principal

by

**The Rt. Revd. S. W. Fernando**

(Bishop of Colombo)

at

St. John's Church, Chundikuli

on

Friday, 8th July 1983 at 5 p. m.

*St. John's Church, Chundiculi*

## Thanksgiving Service and Burial of Ashes

A Service of Thanksgiving for the life of *Mrs. Thapomany Manoharan*, who passed away in London in 30-1-83, was held at St. John's Church, Chundiculi on 25-6-83. The Rev. Joseph Sarvanandhan led the Service.

Her Ashes were interred at the St. John's Church burial grounds soon after the Service.

Thapomany is the daughter of the late Mr. Peter Somasundaram and Mrs. Samatham Somasundaram of Somasundaram avenue Chundiculi and wife of Mr. Christy Chelliah Manoharan (England).

## Colonel Dobble in Jaffna

*Colonel Orde C. S. Dobble*, the son of the famous British General, the late Sir William Dobble visited Jaffna from the 23rd to the 27th of June. His visit to Sri Lanka was sponsored by the Christian Embassy in Jerusalem which was formed a few years ago representing 21 countries.

Beginning his career in his fathers footsteps as a soldier he retired early to become a teacher and social worker.

Twelve years ago he moved to Jerusalem to work as Administrator of the Garden Tomb.

In Sri Lanka he has visited many places and addressed christian gatherings. He leaves for Jerusalem tomorrow. On the 23rd of June, Colonel Dobble met the clergy and church workers in Jaffna at the St. John's College Library. The meeting was arranged by the Archdeacon of Jaffna, the Ven. Sam D. Horshington.

## Sri Lankan Foreign Exchange Earners

Quoting the Central Bank, the Tourist Board gave the folowing statistics for the top eight foreign exchange earners of the country.

| | Sector | 1981 (Rs. Mn) | 1982 (Rs. Mn) | % Increase |
|---|---|---|---|---|
| 1. | Tea | 6,444 | 6,342 | -1.6 |
| 2. | Private remittances | 4,430 | 5,789 | 30.9 |
| 3. | Textiles & garments | 3,021 | 3,502 | 15.9 |
| 4. | Petroleum products | 3,375 | 3,280 | -2.9 |
| 5. | Tourism | 2,546 | 3,050 | 19.8 |
| 6. | Rubber | 2,889 | 2,323 | -19.6 |
| 7. | Coconut | 1,438 | 1,496 | 4 0 |
| 8. | Gems | 633 | 635 | 8 2 |

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 143 ] 1 – 7 – 1983 [ இதழ் 26


## ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள்!

நம் முன்னோர் இறையன்பினால் தூண்டப்பட்டு, ஆலயங்களை அமைத்து, இறைவனை வழிபட்டு வந்தனர். இவ்வாலயங்கள் நம் நாட்டில் அழியாத செல்வங்களாக, பக்தியின் கருவூலங்களாக, திகழ்கின்றன

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்பது ஔவைப் பிராட்டியின் அமுத வாக்கு. "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்" என்பது திருமறையின் திருவாக்கு 'கோவில் இல்லாத ஊரில் குடியிராதே' என்பது முதுமொழி. இத்திருமொழிகள் ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

இருந்தும், நம்மிற் சிலர், 'இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான்; எனவே, ஆலயத்தில் சென்றுதான் இறைவனை வணங்க வேண்டுமா? நம் வீடுகளிலிருந்து இறைவனை வழிபட்டால் போதாதா? வானொலியில் ஒலிபரப்பப்படும் வழிபாட்டில் கலந்துகொள்கிறோம், ஆலயத்திற்கு ஏன் போக வேண்டும்' என வாதிக்கின்றனர்.

இறைவன் எங்கும் இருக்கின்றான். இதை ஒருவரும் மறுக்கவில்லை. ஆயினும், வழிபாட்டிற்கென பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயத்திலும் இறைவன் தோன்றுகிறான். 'கடவுள் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்' (சங். 11;4). எனவே, இறைவனின் அருளைப் பெற விரும்புவோர், ஆலயத்திற்குக் கூட்டாகச் சென்று, இறைவன் திருமுன் நின்று வழிபட்டு வந்தால், அவரின் திருவருளைப் பெறுவது நிச்சயம்.

தனிமையாய் இறைவழிபாடு செய்வதும் தேவைதான். ஆயினும், இத்தனி வழிபாடு மட்டும் கிறிஸ்தவ வழிபாடாக மாட்டாது. கிறிஸ்தவ சமயம் வலியுறுத்துவது, கூட்டு இறை வழிபாடே. கிறிஸ்தவ வாழ்வு, கூட்டு இறை வழிபாட்டின் மூலமே நிறைவு பெறுகின்றது. நாம் இவ்வழிபாட்டில் கலந்துகொள்ளும்போது, இயேசு பெருமான் நமதுள்ளத்தை தமது ஆலயமாக்குவர். "நீங்கள் கடவுளின் ஆலயம்" "உங்கள் உடல் தூய ஆவியின் கோயில்" (I கொ. 3:16; 6:19).

ஆகவே, மனிதனைப் புனிதனாக்குவது ஆலய வழிபாடே. வேண்டிய உடல் நலத்தையும், ஆன்மீக ஆற்றலையும் இவ்வழிபாட்டின் மூலம் நாம் பெறலாம். இவ்வழிபாட்டு முறையைத் திருச்சபை ஆதிதொட்டு நடைமுறையிற் கையாண்டு வந்தது. இதுவே கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளின் அடிப்படை.

இறைவன் நமக்கருளிய அன்பிற்காக நன்றி கூறி அவரை ஒருமனப்பட்டு வாழ்த்திப் புகழ்ந்து போற்றுவதே கூட்டு இறைவழிபாடாகும். 'எங்கே இரண்டு மூன்றுபேர் என் பெயரால் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருக்கிறேன்' (மத். 18:20) என்பதே இவ்வழிபாட்டின் மறைபொருள்.

ஆலயத்தில் வழிபடுவோர், அங்கு தூய ஆவியானவர் அசைவாடுவதை அனுபவிப்பார்கள். அவர்களின் பாவங்கள் அனைத்தும், அனலிற்பட்ட பஞ்சைப் போன்று திருவருளால் முற்றாய் நீக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுவார்கள். இகபர நன்மைகளை அடைந்து அமைதி பெறுவார்கள். இதனையுணர்ந்தே சங்கீதகாரன், "கடவுளுடைய ஆலயத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருப்பதையே நாடுவேன்" (சங் 27:4) என்று கூறினர்.

நமது சபையாரிற் பலர், ஞாயிறுதோறும் ஆலயஞ் சென்று இறைவழிபாட்டில் கலந்துகொள்ளத் தயங்குவதேன்? எதற்காக ஆலய வழிபாட்டை விரும்பவில்லை? றோமன் கத்தோலிக்க சபையார் ஆலய வழிபாட்டில் காட்டும் ஊக்கம், நமது சபையாரில் ஏன் காணப்படவில்லை? இதனைக் குருமார் ஆழமாக ஆராய்ந்து உரிய காரணத்தைக் கண்டு, ஆலய வழிபாட்டைப் புறக்கணிப்போரைச் சந்தித்து, இவ்வழிபாட்டின் முக்கியத்துவத்தை அறியச் செய்தல் வேண்டும்.

"சபையார் ஒன்று கூடும்போது சிலர் வழக்கமாக அதிற் கலந்துகொள்வதில்லை. நாம் அவ்வாறு செய்யலாகாது. நாம் ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுவோமாக........." (எபி. 10:25) என்ற வாக்கிற்கிசைய, நமது சபையார் 'ஆவியிலும் உண்மையிலும்' இறைவனைத் தொழுதுகொள்ளும்படி வழி நடத்தப்பட வேண்டும்

'இறைவனின் ஆலயத்திற்குப் போனால், அவர் தமது வழிகளைப் போதிப்பார்' (ஏசா. 2:3) என்றும் 'அவரை வந்தடைந்தவர்களை அவர் ஒருபோதும் தள்ளிவிடமாட்டார்' (யோ. 6:37) என்பதையும் அறிந்து, வாஞ்சையோடு ஒழுங்காக ஆலய வழிபாட்டில் கலந்துகொள்ள சபையாருக்கு கிரமமாக அறிவுரை வழங்குதல் அவசியம்.

நாம் கூடி வாழ்வதே இறைவனின் திட்டம். இத்திட்டம் நிறைவேறும்போது இறையரசு தோன்றும். இதற்காக நம்மை ஆயத்தப்படுத்தவே, நாம ஒன்று கூடி ஆலய வழிபாட்டில் மகிழ்ச்சியோடும் பயபக்தியோடும் கலந்து பயனடைய, அவர்களுக்குரிய பயிற்சியளித்து வழிநடத்த வேண்டியது குருமாரின் கடமை என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

## செய்தித் திரட்டு

**● புதிய பேராயருக்கு வரவேற்பு**

திருமலை — மட்டுநகர் புதிய பேராயர் அருட்பெருந்திரு. ஜெ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பதவி ஏற்ற பின்னர் யாழ். நகருக்கு 19-6-83 மாலை முதல் தடவையாக வருகை தந்தபோது சிறப்பாக வரவேற்கப்பட்டார்.

**● தமிழர் புனர் வாழ்வு நிதியம்**

எந்த நேரத்திலும் அகதிகளாக்கப்படும் நிலையில், அரசின் கையை எதிர்பாராது, தமிழ் மக்கள் தங்களுக்குள் தாமே நிவாரணமளித்துக் கொள்ளும் வகையில் 'தமிழர் புனர் வாழ்வு நிதி' நிறுவப்பட்டது. இதுவரை ரூபா. 1,32,925 இந்நிதியில் சேர்க்கப்பட்டுளது.

**● விண் வெளி வீராங்கனை!**

அமெரிக்காவின் 'சலஞ்சர்' விண்வெளி விமானம் 18-6-83இல் வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. 32 வயதுடைய செல்வி செலீறைட் என்ற பெண்ணுடன் ஐந்து விண்வெளி வீரர்கள் இவ்விமானத்தில் பயணஞ் செய்கின்றனர். இவரே. விண்வெளி செல்லும் முதலாவது அமெரிக்கப் பெண்.

உலகில் முதல் தடவையாக சோவியத் யூனியனே 20 ஆண்டுகளுக்கு முன் விண்வெளிக்கு செல்வி வெலன்டீனா தெரஸ்கோவா என்ற பெண்ணை அனுப்பியது.

**● சோவியத் யூனியன் ஜனாதிபதி**

திரு. யூரி அந்ரபோ, சோவியத் யூனியனின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

**● இந்தியாவில் ஊனமுற்றோர்**

இந்தியாவில் ஒரு கோடியே இருபது லட்சம் ஊனமுற்றவர்கள் இருக்கிறார்களென கணிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் தமிழ் நாட்டில் சென்னை நகரில் 1021 பேரும், பஞ்சாபில் 1026 பேரும், அஸ்ஸாமில 1008 பேரும் உள்ளனர், ஏனையவர்கள் கிராமப் பகுதிகளில் காணப்படுகின்றனர்.

**● பாராட்டப்பட வேண்டிய பெருஞ்செயல்!**

வடலியடைப்பைச் சேர்ந்த இந்து சமயத்தவரான திரு. ஆலாலசுந்தரம் தமது 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பத்துப் பரப்புக் காணியை சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இது சைவ - கத்தோலிக்க நட்புறவை விருத்தி செய்ய ஏதுவாயுள்ள நற்செயலாகும். ஒருவர் இன்னொரு மத ஆலயத்திற்கு தன் சொந்தக் காணியை வழங்குவது மிகவும் பாராட்டிற்குரிய செயலாகும்.

**● தமிழினத்தின் ஒற்றுமை**

'தமிழினத்தின் ஒற்றுமையையும் பலத்தையும் கட்டிக் காக்க இளைஞர்கள் உறுதிகொள்ள வேண்டும். இல்லையேல் நம்மினத்தையும், நமது நிலத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும்', என்று தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மாணவர் பேரவை கூட்டாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துளது;

**● பிரதமர் பிரார்த்தனை!**

இந்நாட்டு மக்கள் மத்தியில் அமைதியும் நல்லெண்ணமும் ஒற்றுமையும் நிலவ வேண்டுமென்று தாம் சகல மதங்களையும் சேர்ந்த ஆலயங்களில் சென்று வேண்டுதல் செய்து வருவதாக பிரதமர் திரு. பிரேமதாசா 18-6-83இல் நிக்கவெரட்டியாவில் நடைபெற்ற கிராமோதய பொருட்காட்சியில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

**● பங்களூர் ஐக்கிய இறையியற் கல்லூரி புதிய அதிபர்**

அருள்திரு. டாக்டர் E. C. ஜோன் அவர்கள் பங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டார். நியமன ஆராதனை 18-6-83, இக்கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அருள்திரு. டாக்டர் றசல் சந்திரன் அவர்கள் ஓய்வு பெற்றபடியால், அவரின் இடத்தில் டாக்டர் ஜோன் அவர்கள் நியமிக்கப்பட்டார். அறிவர் ஜோன் அவர்கள் பங்களூர் இறையியல் கல்லூரியில் பேராசிரியராக நெடுங்காலமாகப் பணியாற்றி வந்தார். இவர் பழைய ஏற்பாட்டுத் துறையில் ஆராய்ச்சி செய்து ஹய்டெல்பேர்க் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.

இவர் இறையியல் துறையில் பாண்டித்தியம் பெற்றதோடு, தென் இந்திய திருச்சபையின் பேரவை மட்டத்தில் பல பணிகளில் ஈடுபட்டு உதவி வந்தார். பங்களூர் சபைகளிலும் நற்பணியாற்றி வந்தார். இவரின் பொறுப்பில் ஐக்கிய இறையியல் கல்லூரி இன்னும் பல துறைகளில் முன்னேற்றமடைந்து திருச்சபைக்கு ஏற்ற குருமாரைப் பயிற்றுவித்து அனுப்புமென்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

## சேவை நலம் பாராட்டு வைபவம்

வவுனியா, செட்டிகுளம் பகுதிகளில் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் கனம் A. C. மதனராஜா போதகர் அவர்கட்கும் அவரது குடும்பத்தினருக்கும் வவுனியா சபை மக்களால் ஒரு பிரிவுபசார வைபவம் 19-6-83 ஞாயிற்றுக்கிழமை திரு விருந்தாராதனையின் பின் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு மதுரை இறையியற் கல்லூரி மாணவன் திரு. மா. தேவதாசன் அவர்கள் தலைமை தாங்கினார். போதகர் அவர்களின் சேவையைப் பாராட்டி திரு. மூ. இரத்தினபிரகாசம் அவர்கள் பேசினார். அவரின் உரையில், மதனராஜா போதகர் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆற்றிய தொண்டினால் தான் சிதறுண்ட மந்தையை சேர்த்து ஒன்றுக்கிய பெருமை அவருக்குரியது என்றும், எமது புதிதாக உருவாக்கப்பட்ட இத்திருச்சபையின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான வேலைகள் இன்னும் செய்ய இருப்பதாகவும், அவர் ஆதீனத்தின் செயலாளராகப் பதவி ஏற்றுப் போவதனால் இன்னும் அவரால் தொண்டாற்ற முடியும் என்றும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார். இதனை அடுத்து அவருக்கு வவுனியா சபையின் சார்பில் ஓர் அன்பளிப்பு திரு. மா. தேவதாசனால் அளிக்கப்பட்டது. அதன் பின் குருவானவர் சபையாருக்கு நன்றி கூறி தனக்கு ஆதீனத்தில் கிடைத்திருக்கும் பதவியைக் கொண்டு வவுனியா பகுதிக்கு நல்லுதவிகளை செய்வதாகவும் வாக்குறுதி அளித்தார். அதையடுத்து சபையாரால் தேநீர் விருந்து நடாத்தப்பட்டது. கூட்டம் முடிந்ததும், குருவானவரும் நிர்வாக உறுப்பினரும் ஆலயத்திற்காக ஒரு காணியை வாங்குவதற்கு, பார்வையிட்டு அக்காணியை வாங்கும் நோக்கத்துடன் ஆவன செய்வதாக போதகர் வாக்களித்தார். பின் சபையாருக்கு நன்றி கூறி விடை பெற்றார்.

# பழைய ஏற்பாட்டில் காணப்படும் முப்பெரும் நன்றிப் படையல் திருவிழாக்கள்

(E. R. A.)

(முற்தொடர்ச்சி)

உபா. 16 : 16, 17

"அவர்கள் வெறுங்கையோடு அவருடைய முன்னிலையில் வராமல், கடவுளாகிய ஆண்டவர் அருளிய ஆசிகளுக்கு ஏற்ப, அவனவன் தன்தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கை கொண்டு வரக் கடவன்". (பவுல் அடியார் இக்கருத்தை II கொ. 8ஆம் 9ஆம் அதிகாரங்களில் கையாண்டிருப்பதைக் காண்க.)

யாத். 23 : 19; 34 : 22 —
(கிழமைகளின் திருவிழா)

"உன் நிலத்தில் விளைந்த புதுப் பலன்களை உன் கடவுளாகிய ஆண்டவரின் ஆலயத்திற்குக் கொண்டு வருவாயாக."

"உன் கோதுமை பறுப்பின் முதற் பலனை ஆண்டவருக்குச் செலுத்தும் கிழமைத் திருவிழாவைக் கொண்டாடுவாயாக."

3. யாத். 23 : 15: 16; லேவி. 23 : 22, 37, 38, 40

(அறுப்புக் காலத் திருவிழா — கூடாரத் திருவிழா)

"வெறுங்கையோடு நம் முன்னிலையில் வராதபடி கவனமாய் இருப்பாயாக".

"உன் நிலத்திலே நீ எதை விதைத்திருந்தாலும். உன் வேலையால் கிடைத்த முதற்பலன்களின் அறுப்புக் காலத் திருவிழாவையும் கொண்டாடி வருவாயாக"

"நீங்கள் நிலத்திலுள்ள விளைச்சலை அறுக்கும்போது அதைத் தரைமட்டமாக (வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும்) அறுக்காமலும். தரையில் சிந்திக் கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், அவற்றை ஏழைகளுக்கும் அந்நியர்களுக்கும் விட்டுவிட வேண்டும், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் (நாமே) நானே" என்றருளினார்.

"ஒவ்வொரு நாளுக்கும் உரிய முறைப்படி ஆண்டவருக்குக் காணிக்கை. தகனபலி, பானபோசன பலி முதலியவற்றைச் செலுத்தக் கடவீர்கள்.

"முதல் நாளில் மிக அலங்காரமான மரங்களையும், கிளைகளையும் கொண்டு வந்து நாட்டி, உங்கள் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் மகிழக்கடவீர்கள்.'

(முற்றிற்று)

# நான்! நான்! நானே!!!

"எம்மா"

நான் பிறருக்குச் சிலுவையாய் இருந்தபோதும் இறைவா
நானே இனி சிலுவையாக மாறவேண்டும்
உன் கரங்களாய் நானிருந்து மக்களிடையே
ஒளி ஏந்திச் செல்ல வேண்டும்
உன் கால்களாய் நான் நடந்து எங்கும்
உன்னைப் போதிக்க வேண்டும்
உன் கண்களாய் நான் இருந்து கனிந்த
அன்பு வழிய துயர் துடைக்க வேண்டும்
உன் நாவாய் நானிருந்து உன்னை
எல்லோர்க்கும் போதிக்க வேண்டும்
உன் செவியாய் நான் உன் புகழ்கேட்டு
களித்து திளைக்க வேண்டும்
உன் உடலாய் நான் பிறரைச் சுமந்து
உன் பணி ஆற்ற வேண்டும்
மொத்தத்தில் நீயாக நான் ஊன் மறந்து
உயிர் துறந்து சாட்சியாக வேண்டும்

(நன்றி: பிரதீபம்)

## நன்றி செலுத்தும் ஆராதனை

அமரர் கனம் N. W. G. சுகுணராசா போதகர் அவர்களின் வாழ்க்கைப் பணிகளுக்காக நன்றி செலுத்தும் ஆராதனை யாழ். பேராயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு. வட்டுக்கோட்டையில் 24-6-83 மாலை 4-30 மணிக்கு, பேராயர் அருட்பெருந்திரு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. அருள்திரு. J. J. இரத்தினராசா அவர்கள் இரங்கலுரை வழங்கினார். செல்வி S. சுகுணராசா, சாவகச்சேரி சபைச் செயலர் திருமதி A. மகிந்தா ஆகியோர் வேதப் பாடங்களை வாசித்தனர். குடும்பத்தினரும், உடுவில் மகளிர் கல்லூரி பாடகரும் சிறப்புப் பாடல்களைப் பாடினர். அருள் திரு. D. R. அம்பலவாணர் அவர்கள் அருளுரை ஆற்றினார். பேராயரின் ஆசீர்வாதத்துடன் ஆராதனை முடிவுற்றது. ஆராதனையின் பின் திருமதி சுகுணராசா, பிள்ளைகளால் அனைவர்க்கும் தேநீர் விருந்துபசாரனை நடத்தப்பட்டது.

## கல்முனையில் வைகாசி விழா!

வைகாசி விழா எனும்போது, வைகாசி விசாகத்தை முப்பெருஞ் செயல்களின் நினைவாகக் கொண்டாடும் பௌத்தர்களும், வருடந்தோறும் வைகாசிப் பௌர்ணமியில் கண்ணகிக்கு விழா எடுக்கும் இந்துக்களுமே நம் மனக்கண் முன் வருவர்.

ஆனால் கல்முனை கண்ட இவ் வைகாசி விழா கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் ஆதரவில், எல்லா மதத்தினரும் கலந்து கொண்ட விழாவாகும். கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து மக்கள் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றவரும், கல்முனை அபிமான வைத்தியக்கலாநிதியுமான, முருகேசம்பிள்ளையவர்களாற் தொடக்கி வைக்கப்பட்டமையும், எல்லா மதத்தவரும் கலந்து சிறப்பித்தமையுமே இவ்விழாவைப் பெருவிழா ஆக்கியதெனலாம். மெதடிஸ்த திருச்சபை ஆலய வழிபாட்டோடு நின்று விடாமல், தன் சூழலிலுள்ள மக்கட் குலத்தின் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டுவதை மக்கள் அவதானித்தமையாற் போலும், அன்று நடந்த களியாட்டு விழாவிலும், விற்பனைகளிலும் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்கர், புரொட்டஸ்தாந்தர் என்ற பேதங்கட்கிடமின்றிக் கூடிக் களித்து. அதை ஒரு சமூக விழாவாக ஆக்கினர்.

கல்முனைத் திருச்சபைக்கான காணியைச் சுற்றி மதிலெழுப்பிக் காவற்படுத்த வேண்டிய அவசியத்தை நிதிப் பற்றாக்குறையினால் தள்ளிப்போட்ட ஆலய பரிபாலனம், கனம் தேவநேசன் போதகரவர்களது தலைமையிற் போதிய நிதி திரட்டப்படும் என்ற பெரு நம்பிக்கையில், சுற்று மதிலை ஆரம்பித்துவிட்டது.

அன்றைய விழா, நிதியை மட்டும் சேர்க்காது இன மத பேதங்களை அகற்றிய ஒரு சகோதரத்துவ சூழ்நிலையை உண்டாக்கியமையை அங்கு சமுகமளித்தோர் கவனிக்கத் தவறவில்லை.

நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்த ஆண்டவரைப் பின்பற்றும் அன்பர்கள், சுற்றித் திரிந்து நன்மை செய்யக் கூடிய அளவுக்கு இவ்விழா நிதியைத் திரட்டித் தந்துள்ளது. இதற்காக அள்ளிக் கொடுத்த அன்பர்களைப் புகழ்வதா? அல்லது ஆவன செய்து இனியதோர்நாளை இனிது முடியச் செய்த இறைவனுக்கு எல்லாக் கனமும், மகிமையும் உண்டாவதாக! என்று கல்முனைத் திருச்சபையோடு சேர்ந்து நாமும் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

— தி. இராமச்சந்திரன்.

## குடும்பக் குறிப்புகள்

○ உங்கள் கம்பளிப் போர்வையைத் தோய்த்த பின்னர், கற்பூரம் கரைக்கப்பட்ட நீரில் அதைக் கடைசியாக அலசிடுங்கள். இதனால் பூச்சி அரிப்பதைத் தடுக்கலாம்.

○ போத்தலுக்கு போட நீங்கள் வாங்கிய "கார்க்" அளவில் பெரியதாக இருந்தால், அதை இரண்டு நிமிடங்கள் கொதி நீரில் போட்டு எடுத்தால் சுருங்கிவிடும்.

○ மீன் கறி சமைக்கும்போது, மீன் கரைந்து விடாமலிருக்க, குழம்பில் சிறிது எலுமிச்சை ரசத்தைச் சேர்க்கலாம்.

○ கரப்பான் பூச்சியின் தொல்லையை நீக்க முடியவில்லையா? கேளுங்கள்:— இரவில் உங்கள் வீட்டின் குளியல் அறை, அடுக்களை முதலிய இடங்களிலிருந்து நீர் வெளியேறும் பகுதிகளில் சிறிது மண் எண்ணெயைத் தெளித்து வையுங்கள். மண்ணெண்ணெயில் நனைத்த துணியைக் கொண்டு தரையைத் துடைத்து வைப்பதும் நலலது. கரப்பான் பூச்சி வராது.

○ இப்போ அனேகர் "பட்டனுக்"குப் பதிலாக "ஸிப்" போட்ட சட்டை, கால் சட்டை முதலியவற்றை அணிகிறார்கள். ஆனால் அடிக்கடி இந்த "ஸிப்" முன்னுக்கும் பின்னுக்கும் போக முடியாமல் நடுவில சிக்கி நிற்கிறதே என்று கவலைப்பட வேண்டாம். "ஸிப்"பின் பற்களில் பலதடவை மெழுகுவர்த்தியால் தேய்த்து விடுங்கள். அதனபின "ஸிப்"பை இழுப்பது சுலபமாகிவிடும்.

○ எதை வைத்தாலும், இந்த எறும்பின் தொல்லை நீங்குதில்லையே என்று கவலைப்பட வேண்டாம், போரிக் பவுடரையும், சீனியையும் சம அளவில் கலந்து தரையில் தூவி வைத்தால் எறும்புத் தொல்லை ஒழிந்து விடும்.

— (தொகுப்பு: "கிளி")

மரணம்

## அன்னு அருளம்மா

சுண்டிக்குளி புனிதர் யோவான் கல்லூரியில் பல ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்று இருக்கும் திரு. M. S. தம்பித்துரை அவர்களின் துணைவியார் அன்னு அருளம்மா 22-6-83இல், சுண்டிக்குளியில் உள்ள தமது இல்லத்தில் காலமானார்.

இவரின் இறுதியாராதனை சுண்டிக்குளியில் 23-6-83 பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்றது அருள்திரு. J. சர்வானந்தன் அவர்கள் ஆர்ச்டீக்கன் வண. சாம் D. ஹொசிங்டன், நுணுவில் சபை ஊழியன் வண. J. S. மேதர் ஆகியோரின் உதவியுடன் இவ்வாராதனையை நடத்தினார். இவரின் உடல். சாவகச்சேரி C. S. I. கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

●

## பேரின்பநாயகம் தேவராசா

யாழ். வறகன் பொறியியல் நிறுவனத்தின் பொறுப்பாளர் திரு. P. தேவராசா அவர்கள் 24-6-83இல் காலமானார். திரு. தேவராசா, யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கட்டடப் பொறியியலாளராய் விளங்கினார். யாழ். நவீன சந்தைக் கட்டடம். யாழ். பல்கலைக்கழகத்தில் சில முக்கிய கட்டடங்கள், யாழ். கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தில் சில கட்டடங்கள், யாழ். றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் ஆசனத் திருக்கோவில் போன்ற பல முக்கியமான கட்டடங்களைக் கட்டி முடித்தார்.

இவரின் இறுதி ஆராதனை 25-6-83 காலை 8-00 மணியளவில் யாழ். நாவலர் வீதியில் உள்ள இவரது இல்லத்தில் நடைபெற்றது. அதன்பின் யாழ். பட்றிக் கல்லூரி பழைய மாணவர் மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக இவரது உடல் வைக்கப்பட்டது. பலர் இரங்கலுரை வழங்கி தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இவரது உடல் தெல்லிப்பளை C. S. I. கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது

இவ்வாராதனையை அருள் திரு. D. R. அம்பலவாணர் அவர்கள் நடத்தினார். திரு தேவராசா அவர்கள் தெல்லிப்பளையில் பிறந்தவர். யாழ். பட்றிக் கல்லூரியிலும் யாழ். கல்லூரியிலும் படித்தவர்.

## என் அனுபவம்

நான் தந்தையானேன். பிறகுதான் பிள்ளைகள் மீது வைக்கும் அன்பு இத்தகையது என்று தெரிந்தது. பாட்டனும் ஆனேன். இப்பொழுதான் பேரப் பிள்ளைகள் மீது வைக்கும் ஆசை இப்படிப்பட்டது என்பது தெரிகிறது. தெரிந்தும், என் அன்பையும் ஆசையையும் அறியாமல் என்னை ஒரு பொருளாகக் கூடக் கருதாமலும் அப்பிள்ளைகள் நடந்து கொள்வதைப் பார்க்கும் என் உள்ளம் பெரிதும் வருந்துகிறது. "என் தந்தையினதும் பாட்டனினதும் மனம் இப்படித்தான் புண்பட்டிருக்கும்" என்று எண்ணும்போது, என் கண்களிலிருந்து இரத்தம் சொட்டுகிறது.

— கி. ஆ. பெ. விசுவநாதம்.

*EDITORIAL*

## Justice, Law and Order

The imposition of a protracted curfew in Trincomalee because of incidents of violence and arson which were reported to have taken place during curfew hours raises many vital issues.

The origin of the word 'curfew' goes back to the time when in England, clocks of the conventional kind had not been invented and the town authorities had to employ a watch-man to go round the villages in the evenings with a bell warning the people to put out their hearth and go to bed, as night was fast approaching.

Later, the 'curfew' referred to the steeple bell which the English poet, Thomas Gray, immortalised in his *Elegy on a country churchyard* as tolling "the knell of parting day".

The curfew in the modern sense is a legal proclamation by the state calling upon the people to be indoors and discipline themselves in view of turbulence and riots in the country. The Tamil translation ஊரடங்குச் சட்டம் expresses the idea forcibly. The security forces are empowered to see to the implementation of the order. Civilians who break the law risk their lives at the hands of the only people who are out of doors during curfew time — the armed services.

Today in Sri Lanka what the curfew stands for, and what the curfew is "tolling the knell of", is a matter of which the Government should take serious note, particularly in the context of the blizzard of sombre events reported from Trincomalee in recent weeks, when even innocent children fell victims to arson and violence.

Both the M. P. for Trincomalee and the District Minister have, we note, been visibly moved by some of the incidents and have decided to stretch every muscle to restore tranquility and calm in the country. State power exists primarily to protect the people, particularly the less priviledged and the neglected.

But one fundamental factor has to be borne in mind in the grim contemporary situation in our country. History tells us that people's movements become prominent when certain epoch-making events occur.

Workers' movements, farmers' movement, the Dalit movement, the women's movement and the civil rights movement have, in India, gained enough momentum, in certain cases, to discuss terms with the powers-that-be.

The Church at its birth is one of the finest example of a people's movement. The Church was founded not upon stones but upon ordinary people who responded to concrete historic situations.

It is only when community control slakens that instituitional control increases. If citizens cannot re-make ravaged communities, no one can. They may lose a few battles but they will win the war.

---

*JDCSI*

### Service of Thanksgiving

A Service of Thanksgiving for the life and work of Rev. N. W. G. Sugunarajah, Presbyter of the Diocese 1955 — 1983, was held at the Cathedral Church, Vaddukoddai on June 25th, 1983 at 4-30 p. m.

The Rt. Rev. D. J. Ambalavanar led the Service. The Bible Lessons were read by Miss Melo Sugunarajah and Mrs. A. Mahinda. The Uduvil Girls' College Choir sang a special anthem.

The Rev. J. J. Ratnarajah paying the Tribute said that the departed Presbyter and he were associates for a very long period. What struck him most in his life was Rev. Sugunarajah's commitment to the task assigned to him, a commitment which overshadowed all his other interests and concerns in his life. As the General Secretary of the JDCSI for the last two years entailed long hours of extra work, in addition to his parish chores. "I would wear out than rust out" was his philosophy of life. In the passing away of Rev. Sugunarajah, the Diocese has lost an indefatigable and conscientous Worker who leaves behind a rich tradition of honest, hard toil in God's vineyard.

The Litany of Thanksgiving was led by the Bishop. Rev. D. R. Ambalavanar preached the Sermon.

The Service concluded with prayer and Benediction pronounced by the Bishop.

---

*Obituary*

**Mrs. M. S. Thambithurai**

Annah Arulammah wife of Mr. M. S. Thambithurai, retired teacher, St. John's College, Jaffna died on the 22nd of June, 1983 at Chundikuli. The funeral took place at their residence in Chundikuli on Thursday the 23rd instant at 3-00 p. m. The Service was conducted by the Vicar of the Parish the Rev. Joseph Sarvanandan. The remains were buried at the Chavakachcheri Church burial grounds.

* * *

**Mr. E. J. Jeyarajah**

We are sorry to record the death which occurred on 30-6-83 of *Mr. E. J. Jeyarajah* of Chavakachcheri.

He was for many years associated with the Jaffna Diocese of the Church of South India and its predecessor, the American Ceylon Mission.

A detailed report will follow

## Jaffna College

**Another Outstanding Student Achievement :**

Mas. S. Nesananther of the Advanced Level Bio-Science Class obtained the first prize for the Tamil Essay Competition organised by the Department of Education in connection with the Gam Udawa Exhibition 1983 on the subject, "Youth participation in the Rural Upliftment Movement."

**Cross Country Races and Festival :**

The Annual Festival was organised and completed with great gusto and enthusiasm. A very large number of students participated in the competitions and demonstrations in a wide range of activities. Besides the Cross Country races and bicycle races for all age groups there were contests in Table Tennis, Badminton, Tennis, Netball, Basket-ball, Karete, Hockey, Soccer, Volley Ball, Thatchie, Tamil and English Oratorical contests, Music and dancing and instrumental items. The Annual Sports and Culural Festival ended with a variety entertainment and a lavish prize-distribution at which the the Principal and Mrs. Kadirgamar were the chief guests on Tuesday 21st June.

Another encouraging feature of the Festival was that members of the staff also participated in some of the open competitions, including the Principal.

## An Interim Solution

An Interim solution to the Tamil problem is, we learn, the subject of a communication which the Jaffna Citizens Committee has forwarded to the President Jeyawardene.

The essence of the blueprint is the division the country into FIVE regions. Defense, Foreign Affairs and Finance are to be under the Central Government. Other departments could be administered by the respective regions,

If the President of the State is a Sinhala, the Deputy President may be a Tamil or Muslim. Periodically the office of Deputy President should keep changing. Sinhala, Tamil and Engish should be considered official languages.

The Prevention of Terrorism Act and all other laws that affect the fundamental rights of the citizens should be withdrawn and Courts of law should be empowered to protect the citizen when his rights are violated.

Dr. Luthr Jeyasingam is President and Mr. R. Balasubramaniam, Attorney-at-Law is Secretary of the Jaffna Citizens Organisation.

---

*In brief*

○ *Sri Lanka's Infant Mortality Rate* which is one third Africa's and half of the rest of Asia is one of the few success stories in the Third World according to the prestigious Asian Wall Street Journal.

## Hail and Farewell at Chundiculi

*The Chundiculi Girls' College, OGA*, held a full morning General Meeting on 25-6-83 to honour the retiring Principal, Mrs. G. E. S. Chelliah and welcome the new Principal Mrs. L. P. Jeyaveerasingham.

A Service of Thanksgiving with Holy Communion was held at St. John's Church, led by Rev. J. Sarvanandhan. The Archdeacon of Jaffna, The Ven. S. D. Horshington preached the Sermon. A fellowship breakfast followed in the school Dining Hall.

At the Business Meeting held in the school hall, presided over by the President, Mrs. P. Arulrajah, speeches of appreciation of the services rendered to Chundiculi by the retiring Principal, Mrs. Chelliah were made by Mrs. Gnanaselvathy Jeevaratnam, a younger 'old girl' Miss Chelvi Selliah, a colleague in the school administrative service and Miss Shanti Panchalingam, an undergrad.

Dr. Miss Malini Jesudason welcomed on behalf of the OGA the new Principal, Mrs. Jeyaveerasingham. The Treasurer of the OGA, Mrs. Balasundaram made a presentation to Mrs. Chelliah. The Secretary, Mrs. Naveena Devanandhan proposed a Vote of Thanks.

## One-fourth of Sri Lankan's gets less than Rs. 200

The income cake is best shared in the plantations while disparities in distribution are particularly marked in urban areas, the census departments's labour force and socio-economic survey 1980—81 (third round) has revealed.

The report says that the majority of the country's income receivers get Rs. 200 or less per month. This category constitutes nearly a fourth (22.4 p.c.) of all income receivers.

The more affluent income receivers, with Rs. 1,000 or more per month, are 2 p.c. of the total but they share 16.3 of the total incomes received in the country.

In the estates sector 64 p.c. of the total income is shared by 70.2 p.c. of the income receivers whose monthly earnings range from Rs. 200 to Rs. 400.

## Power Cut Likely

According to the Additional General Manager of the Ceylon Electricity Board, the six gas turbines of the Board are being worked to maximum capacity to meet the peak hour demand in Sri Lanka.

In 1977, the CEB generated 261 MW electricity. It has now risen to 440 MW. The demand is expected to go up to 480 MW.

CEB officials are carefully watching the water in-flow figures at Castlereagh and Moussakelle reservors which help to generate the major quantity of power to the national grid."

---

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sarmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 1st July 1983 and published by Mr. Alvappillai Rajasingam, 330 Navalar Road, Jaffna,